பள்ளிக்
கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல்
மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

# தேன்சிட்டு


THEN CHITTU
FORTNIGHTLY

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 16-30 செப்டம்பர் 2024
- சிட்டு 3 • இதழ் 44
- விலை : ரூ. 20/-
- சென்னை

- 16-30 SEPTEMBER 2024
- Chittu 3 • Issue 44
- Price : Rs. 20/-
- Chennai




தினமும் மதியம்
வாசிப்பு நேரம்
1.00 மணி முதல்
1.20 மணி வரை



## தமிழ்நாட்டு விலங்கு

பற்றித் தெரிந்துகொள்ள
16 ஆம் பக்கம்
வாங்க...


மழை 08


முன்னோடி எழுத்தாளர் 14


துணிச்சலான பெண்மணி 21 →

# கண்டுபிடி





தமிழ்நாட்டில் பல அணைகள் உள்ளன. அவற்றில் சில அணைகளின் பெயர்கள் இங்கே கலைந்து கிடக்கும் எழுத்துகளில் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்!

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | ச் | க | ல் | ல | ணை | ரு | யு | ஈ | ப |
| வை | னா | ப | உ | ல | ம | க | க் | க | வா |
| ம | ணி | மு | த் | தா | று | ண் | ண | ன் | னி |
| எ | னே | ரு | தி | க | ஏ | ர | அ | ய | சா |
| செ | மோ | பா | மே | ட் | டூ | ர் | ம | ச | க |
| ஆ | ச் | ப | ஜே | ரா | வே | லோ | ரா | ப | ர் |
| ழி | அ | நா | ழ | கீ | ணை | ர | வ | ஜ் | ஐ |
| யா | ள | ச | பி | ரி | சா | வ் | தி | லெ | ப் |
| று | ரோ | ம் | யா | சா | த் | த | னூ | ர் | பை |
| ஆ | ரை | இ | னு | ரி | ரா | கொ | பை | வை | கை |

விடைகள்: 20ஆம் பக்கம்

**அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!**

# மணி அடிக்குது



அழைப்பு மணி அடிக்கிறாங்க - கதவைத் திறங்க
ஐஸ் வண்டி மணி சத்தம் - காசை எடுங்க.

கொட்டகையில் மணி அடிச்சா - மாட்டைப் பாருங்க
அசைந்து வரும் மணியோசை - ஆனை வருதுங்க.

ஸ்டேஷன் மாஸ்டர் மணி அடிச்சா - ரயிலு வருமுங்க
தீவண்டி மணி அடிக்குது - வழியை விடுங்க.

நடுவர் ஒரு மணி அடிச்சா - பேச்சை நிறுத்துங்க.
இசைப்பாட்டின் இடையில் மணி - இனிமை தானுங்க.
இது கடகடன்னு கடைசி மணி - வீட்டுக்குப் போங்க.

– குருங்குளம் முத்து ராஜா

4

புலியின் தந்திரம்

10

காற்றடிக்கும் பம்ப்

15

எங்க ஊரு திருப்புறம்பியம்

18

புதிய ஊரை நோக்கி...

22

கீழாநெல்லி

தேன்சிட்டு
ThenChittu Fortnightly
- 16 - 30 செப்டம்பர் 2024
- சிட்டு 3 ★ இதழ் 44
- 16 - 30 SEPTEMBER 2024
- Chittu 3 ★ Issue 44

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

பொறுப்பாசிரியர் :
யெஸ். பாலபாரதி

இணையாசிரியர்கள்:
விஷ்ணுபுரம் சரவணன்,
பொன். மூர்த்தி

ஆசிரியர் குழு:
இரா. அருண்பாண்டியன்,
பி. சுகுணாதேவி, வி. விஜயகுமார்,
து. மலர்விழி ஜூலியட்

வடிவமைப்பாளர்கள்:
எஸ். சீனிவாசராவ்,
பி. வன்மிகநாதன், பூ. சேஷாத்ரி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in ✣ சந்தா குறித்த தகவல்களுக்கு : magazine.subscription@tnschools.gov.in

பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண் 68, கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
அச்சகம் : ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69-71/A சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம், அஞ்சல் எண் - 600 124

www.Padasalai.Net

# புலியின் தந்திரம்



ஒரு காட்டில் ஒரு நரி இரை தேடச் சென்ற இடத்தில் புலியைப் பார்த்தது. புலியிடம் இருந்து தப்பித்து ஓட முயன்றது நரி.

"நில் நரியாரே, பயப்படாதே. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்றது புலி.

பயந்துகொண்டே நின்றது நரி.

"நரியாரே, எனக்கும் பசிக்கிறது. நாம் இருவரும் சேர்ந்து இரையைத் தேடுவோம். கிடைப்பதைச் சரி பாதியாகப் பிரித்துக் கொள்வோம்... சரியா?" எனக் கேட்டது புலி.

வேறு வழியில்லாமல் "சரி" என்றது நரி.

புலியும் நரியும் காட்டில் நாள் முழுக்கத் தேடியும் எந்த விலங்கும் கிடைக்கவில்லை. அப்போது ஒரு சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி இரண்டும் சென்றன.

ஆழமான குழியில் ஒரு மான்குட்டி விழுந்து மேலே ஏற முடியாமல் தவித்தது.

மான்குட்டியைப் பார்த்த புலியும் நரியும் மகிழ்ச்சியில் குதித்தன.

"புலி அண்ணே, சுவையான இரை நமக்குக் கிடைத்து விட்டது. இந்த மான்குட்டியை மேலே எடுத்து வந்து ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்வோம்" என்றது நரி.

"நல்ல இரை தான். ஆனால், மான்குட்டியை இருவரும் முழுமையாகத் தின்ன வேண்டும்" என்றது புலி.

"அதெப்படி முடியும் புலி அண்ணே?"

"முடியும் நரியாரே. நீ அந்த மான்குட்டியை அடித்துத் தின்று விடு. அதன்பிறகு உன்னை நான் அடித்துத் தின்று விடுகிறேன். இருவருக்கும் மான்குட்டி இரையாகி விடும் அல்லவா?" என்றது புலி.



அப்போதுதான் புலியின் தந்திரம் நரிக்குப் புரிந்தது. எப்படி இந்தப் புலியிடம் இருந்து தப்பிப்பது என யோசித்தது.

"சரியான யோசனைதான் புலி அண்ணே... அதற்கு முதலில் இந்த மான்குட்டியை மேலே தூக்க வேண்டும் அல்லவா?" என்று பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டது நரி.

"அதற்கு என்ன, நானே குழியில் குதிக்கிறேன். அந்த ஏணியை உள்ளே போடு. மான் குட்டியைத் தூக்கிக்கொண்டு மேலே வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு குழியில் குதித்தது புலி.

நரியும் ஏணியைக் குழிக்குள் இறக்கியது. அதன் வழியாக மான்குட்டி மேலே வந்தது. உடனே ஏணியைத் தூக்கி விட்டது நரி.

"நரியாரே, என்ன செய்கிறாய்?" என்று ஆத்திரமாகக் கேட்டது புலி.

"உன்னை மேலே வரவிட்டால் எங்களுக்குத்தான் ஆபத்து. நீயே எப்படியாவது வந்துவிடு" என்று சொல்லிவிட்டு தலைதெறிக்க ஓடியது நரி. 'எப்படியோ உயிர் பிழைத்தோம்' எனத் தாயைத் தேடி ஓடியது மான்குட்டி. குழிக்குள் கிடந்து தவித்தது புலி.

– மீனா

# நாய்க்குட்டி

**ஒரு அழகான நாய்க்குட்டி இருந்தது. அதன் உடம்பெல்லாம் வெள்ளை நிறம். காதில் மட்டும் கறுப்பு நிறம். அது வாலைக் குழைத்துக்கொண்டு ஓடுவதைப் பார்க்கும்போது அதன் தாய்க்கு மிகவும் பெருமையாக இருந்தது.**

யாராவது புதிதாக வரும்போதே தாய் 'உர்' என்று உறுமிக்கொண்டு வாயிலை நோக்கிச் செல்லும். குட்டியும் அதனோடு ஓடும். அதுவும் தன்னைப் போலவே 'உர்' என்று உறும வேண்டும் என்பது தாயின் ஆசை. ஆனால், அந்தக் குட்டி அப்படி உறும விரும்பவில்லை.

பிறகு யாராவது உள்ளே நுழைந்தால் தாய் 'உப்வ் உப்வ்' என்று சத்தமிடும். அந்தச் சத்தத்தைக் கேட்ட பிறகும் பயப்படாமல் உள்ளே அடியெடுத்து வைத்தால் தாய் பயங்கரமாகக் குரைக்கும். குட்டி இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கும்.

"நீ என்னைப் போலக் குரைக்க எப்பொழுதுதான் கற்றுக்கொள்ளப் போகிறாய்?" என்று தாய் சற்று விசனத்தோடு கேட்கும்.

"நீ பழைய மாதிரியே பேசுகிறாய் அம்மா. நான் புதிய விதமாகப் பேசப் போகிறேன். அப்பொழுதுதான் என்னை எல்லாரும் மதிப்பார்கள்" என்று நாய்க்குட்டி சொல்லிற்று. அதைக் கேட்டு, தாய் கவலைப்பட்டது.

அந்த நாய்க்குட்டிக்கு ஓர் எருமைக் கன்றும் வாத்துக் குஞ்சும் சிநேகம். எருமைக் கன்றைப் போலவே கத்தப் பழகிக் கொண்டது நாய்க்குட்டி.

பிறகு, ஒரு பெரிய மாளிகைக்குள் நுழைந்து, வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. அதற்கு நல்ல உணவு கொடுத்து, வீட்டுக்காரர் மாளிகையின் முன்னாலேயே அதைக் கட்டிவைத்தார்.

அடுத்த நாள் காலையில் வீட்டுக்கு வந்த ஒருவரைப் பார்த்து அந்த நாய்க்குட்டி எருமைக் கன்றைப் போலச் சத்தம் செய்தது.

அவர் வீட்டுக்காரரைப் பார்த்து, "தூ, இந்த நாய்க்குட்டியை உடனே அடித்துத் துரத்துங்கள். வீட்டுக்கு முன்னால் எருமை போலக் கத்துது. ஆகவே ஆகாது" என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

நாய்க்குட்டிக்கு நல்ல அடி கிடைத்தது. அது அங்கிருந்து 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று குளக்கரைக்கு வேகமாக வந்து சேர்ந்தது.

அந்தச் சமயத்தில் வாத்துக்குஞ்சு "குவாக் குவாக்" என்று கத்திக்கொண்டு அதனிடம் வந்தது. இந்தப் பேச்சுதான் எல்லோருக்கும் பிடிக்கும் என்று நாய்க்குட்டி அதைக் கற்றுக் கொண்டது.

உடனே மிகுந்த உற்சாகத்தோடு மற்றொரு பெரிய வீட்டில் நுழைந்து வாலைக் குழைத்துக்கொண்டு நின்றது.

அந்த வீட்டிலிருந்து ஒரு சிறுவன் வெளியே வந்தான். அவன் நாய்க்குட்டியின் அழகில் மயங்கிப்போய், "அப்பா, இதை நம் வீட்டில் வைத்து வளர்க்கலாம்" என்று ஆசையோடு கேட்டான். அவரும் சம்மதித்தார்.

சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் அதற்கு பிஸ்கோத்தும் மிட்டாயும் கொடுத்தான். அவற்றைத் தின்றுவிட்டு நாய்க்குட்டி "குவாக் குவாக்" என்று மகிழ்ச்சியில் சத்தமிட்டது. சிறுவன் அந்தச் சத்தத்தைக் கேட்டு மேலும் குதூகலமடைந்தான். "இந்த நாய்க்குட்டி புதிய பாஷை பேசுகிறது" என்று துள்ளிக் குதித்தான்.

இரவில் எல்லாரும் படுத்துத் தூங்கும்போது திருடன் மெதுவாக வீட்டிற்குள் நுழைந்தான். நாய்க்குட்டி "குவாக் குவாக்" என்று சத்தமிட்டது.

அந்தச் சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட வீட்டுக்காரர், 'நம் வீட்டில் வாத்து இல்லையே!' என்று நினைத்துக்கொண்டு மறுபடியும் கண்ணை மூடித் தூங்கிவிட்டார். புதிதாக வந்த நாய்க்குட்டி இப்படிச் சத்தம் செய்யும் என்று அவருக்குத் தெரியாது.

அடுத்த நாள் காலையில் அனைவரும் எழுந்த பிறகுதான் அந்த வீட்டில் திருடு போயிருப்பது தெரிய வந்தது. போலீஸ் நிலையத்திலிருந்து இரண்டு பேர் உடனே அங்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் நாய்க்குட்டி "குவாக் குவாக்" என்று சத்தம் செய்தது.

உடனே வீட்டின் சொந்தக்காரருக்கு எல்லாம் விளங்கிவிட்டது. நாயைப் போலக் குரைக்காமல் இந்த நாய்க் குட்டி புது விதமாகக் கத்தியதால்தான் ஏமாந்துவிட்டேன் என்பதை உணர்ந்தார். நாய்க்குட்டியின் மேல் கோபங்கொண்டு, நன்றாக அதை அடித்து வெளியே விரட்டி விட்டார்.

நாய்க்குட்டி வலி தாங்காமல் "குவாக் குவாக்" என்று கத்திக்கொண்டே தெருவழியாக ஓடிற்று. வித்தியாசமாகச் சத்தம் போடும் அதன்மேல் தெருக்காரர்கள் கல்லைவிட்டு எறிந்தார்கள்.

தன் தாயிடமே வந்த நாய்க்குட்டி "எனக்குப் புதுப் பேச்சு வேண்டாம். உன்னுடைய பேச்சையே கற்றுக் கொடு" என்று கெஞ்சிக் கேட்டது.

தாயும் மகிழ்ச்சியடைந்து சொல்லிக் கொடுத்தது. அன்று முதல் அந்த நாய்க்குட்டியை எல்லாரும் விரும்பினார்கள். அதைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டாதவர்களே இல்லை என்று கூறலாம்.




– பெ. தூரன்

# இளமைப் பெயர் என்ன?

விலங்குகளின் இளமைப் பெயர் எதுவெனச் சரியாகக் கண்டறிக.

**1. புலி**

அ) கன்று ஆ) குட்டி இ) பறழ் ஈ) பிள்ளை

**2. சிங்கம்**

அ) குட்டி ஆ) குருளை இ) கன்று ஈ) களிறு

**3. பாம்பு**

அ) குட்டி ஆ) கன்று இ) கடுவன் ஈ) ஓரி

**4. அணில்**

அ) கலை ஆ) பிள்ளை இ) கன்று ஈ) குட்டி



# மாறன், மாரன் எது சரி?

மாரன், மாறன் ஆகிய இரண்டு சொற்களையும் நாம் பயன்படுத்துகிறோம். ஆனால், எதற்கு மாரன், எதற்கு மாறன் என்பதில் பலருக்கும் குழப்பம் வந்துவிடுகிறது. மாரன் என்பது வடமொழி சொல். இதற்கு மன்மதன் என்று பொருள்.

மாறன் என்பது தமிழ்ச் சொல். இது பாண்டிய மன்னனைக் குறிக்கும்.

தமிழ்ச் சொற்களோடு இணைத்துப் பயன்படுத்தினால் மாறன் என்று எழுதுவதே சரி.

(எ.டு): நெடுமாறன், இளமாறன்


மாரன் என்பதை சுகு என்ற வடமொழிச் சொல் வரும் பெயரோடு இணைத்துப் பயன்படுத்துவோம். சுகுமாரன் என்றால் வடமொழியில் அழகிய மன்மதன் எனப் பொருள். இதுபோன்ற இடங்களில் மாரன் என்றே எழுத வேண்டும்.

# சொல் கண்டுபிடி

ஒரே பொருள் கொண்ட சொற்களைப் பொருத்துக.



| | |
|---|---|
| புத்தகம் | நயனம் |
| மனம் | பனுவல் |
| குளம் | சிந்தை |
| தலை | வாவி |
| வீடு | சிரசு |
| கண் | உறையுள் |



விடைகள்: 20ஆம் பக்கம்

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

**மாணவர்களே!**

உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?



பள்ளிக் கல்வித் துறையின் **மாணவர் உதவி எண்**


நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

**14417**

www.Padasalai.Net



# Tongue twister



ஒரு மொழியைச் சரளமாகப் பேசுவதற்குப் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்று, ஒரே மாதிரியான உச்சரிப்பு உடைய சொற்களைக் கொண்ட வாக்கியங்களைப் பிழையின்றியும் வேகமாகவும் வாசித்துப் பழகுவது. இதை ஆங்கிலத்தில் Tongue twister என்கிறார்கள். அருகே கொடுக்கப்பட்டுள்ள சில Tongue twisterகளைப் பிழையின்றி வேகமாக வாசித்து ஆங்கில உச்சரிப்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

1. If you want to buy, buy, but if you don't want to buy, bye bye!
2. A big bug bit the little beetle, but the little beetle bit the big bug back.
3. She sells seashells by the seashore.
4. I scream, you scream, we all scream for ice cream.
5. How can a clam cram in a clean cream can?
6. I saw a kitten eating chicken in the kitchen.
7. I wish to wash my Irish wristwatch.
8. Four fine fresh fish for you.
9. Eleven benevolent elephants
10. Lesser leather never weathered wetter weather better.



www.Padasalai.Net

# Adverbs of frequency



Adverbs of frequency என்பது செயல் நடைபெறும் கால இடைவெளியைக் குறிப்பது. They sometimes watch TV in the evenings. அவர்கள் எப்போதாவது மாலை நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பார்கள். இதில் 'எப்போதாவது' என்பது கால இடைவெளியைக் குறிக்கிறது.

I always go to the cinema at the weekend.

She usually has cereal for breakfast.

They sometimes read story book in the evenings.

We never go to museums.



always, usually, often, sometimes, rarely, seldom, never, again, daily ஆகியவை Adverbs of frequency சொற்களே. இவற்றை வைத்து வாக்கியங்களை உருவாக்கிப் பழகுங்கள்.

# மழை

அன்று ஞாயிற்றுக்கிழமை. அப்துல் தன் நண்பர்களோடு விளையாட நினைத்தான். ஒவ்வொரு நண்பனின் வீட்டுக்கும் சென்று அவர்களை அழைத்துக்கொண்டு பள்ளி மைதானத்தை நோக்கி நடந்தான். மைதானத்தின் அருகே அவனின் நண்பன் முத்துவின் வீடு உள்ளது. முத்துவையும் சேர்த்துக்கொண்டு மைதானத்தில் விளையாடுவதே அவர்களின் திட்டம்.

முத்துவின் வீட்டுக்கு அருகே பாட்டி ஒருவர் சின்னக் கடை வைத்திருக்கிறார். மிட்டாய், முறுக்கு எல்லாம் அவர்கள் அங்கே தான் வாங்குவார்கள். அந்தக் கடை அருகே சென்றபோது மழை பெய்யத் தொடங்கி விட்டது.

கடை ஓரமாக ஒதுங்கலாம் என அருகே வந்தார்கள். ஆனால், கடையின் கூரையில் பல இடங்களில் ஓட்டைகள் இருந்ததால் கடைக்குள் மழைநீர் கொட்டியது. முறுக்கு எல்லாம் நனைந்தன. அதன் மீது சின்னத் தட்டை வைத்தார் பாட்டி. ஆனாலும் வேறு இடத்தில் மழைநீர் சொட்ட அங்கேயும் அந்தத் தட்டை வைத்தார். அடுத்து என்ன செய்வது எனப் புரியாமல் பாட்டியும் தவித்தார்.

அப்போது அப்துலுக்கு ஒரு யோசனை வந்தது. உடனே முத்துவின் வீட்டுக்கு ஓடினான். சென்ற வாரம் முத்துவின் தங்கைக்குப் பிறந்த நாள் வந்தது. அவளை வாழ்த்தும் விதமாக பெரிய அளவில் ஃப்ளக்ஸ் பேனர் வைத்திருந்தார்கள். முத்துவின் பெற்றோரிடம் பாட்டியைப் பற்றிச் சொல்லி அந்த ஃப்ளக்ஸ் பேனரை வாங்கி வந்தான்.

பாட்டியின் கூரை மீது அதைப் போர்வைப் போலப் போர்த்தினான். நான்கு முனைகளிலும் கயிற்றை வைத்துக் கட்டினான். கடைக்குள் மழைநீர் ஒரு சொட்டுகூட விழவில்லை. பாட்டி நிம்மதியானார்.

– மகேஷ்



# Rain

It was Sunday. Abdul wanted to play with his friends. He picked up each of his friends from their houses and walked towards the playground. His friend Muthu resided near the playground. They planned to call him over to the playground.

An old woman was running a petty shop near Muthu's house. The boys used to buy snacks and candies from the shop. But when they reached the shop, it started raining.

They stood by the side of the shop to escape from the rain. There were several holes in the roof of the shop and it started to pour inside. When the old woman found the snacks getting wet in rain, she placed a plate to cover it. She also put some more plates in other places to cover the things from getting wet. When it started to rain heavily, she didn't know how to manage.

Abdul got an idea to help her out. He immediately ran to Muthu's house. The previous week they celebrated the birthday of Muthu's little sister. They held a large banner to congratulate her on the day. He explained the situation to Muthu's parents and brought the banner.

Using the banner, he covered the shop's roof as a blanket. He tied the rope at all the four ends. The dripping of the rainwater inside the shop stopped. The old woman felt relieved.

- Mahesh

Translated by Saranya

www.Padasalai.Net

# நம்மால் நீருக்குள் ஏன் சுவாசிக்க முடிவதில்லை?

நீர் என்பது ஆக்சிஜனும் ஹைட்ரஜனும் கலந்த கலவை. இதில் நாம் ஆக்சிஜனைத்தான் சுவாசிக்கிறோம். இருந்தபோதும், நீரில் கலந்திருக்கும் ஆக்சிஜனை நம் நுரையீரல் ஏற்காது. நம் நுரையீரல் திறந்தவெளிக் காற்றில் இருக்கும் ஆக்சிஜனை ஏற்கும் வகையில்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் நீரில் மூழ்கினால் நமக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது.



## ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்பதில் மாற்றமே வராதா?



100 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமியின் சுழலும் வேகம் குறையும். இதனால் பகல் பொழுது சராசரியாக 1.8 மில்லி வினாடி அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் கணக்கிடுகிறார்கள். இந்தக் கணக்கின்படி 60 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் என்பது 21 மணி நேரமாகத்தான் இருந்திருக்க முடியும். 2020ஆம் ஆண்டு முதல் பூமியின் போக்கு மாறியுள்ளது. அதன் வேகம் சற்று அதிகரித்துள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## சின்சில்லா எனும் விலங்கைப் பற்றிக் கூறுங்களேன்



எலி, அணில் போலக் கொறித்து உண்ணும் விலங்கினத்தைச் சேர்ந்தது சின்சில்லா. இது பார்ப்பதற்கு முயலும் எலியும் சேர்ந்தது போலத் தோற்றமளிக்கும். பஞ்சு போன்ற தோலினை உடையது. அதற்குக் காரணம் இதன் ஒவ்வொரு மயிர்க்காலிலும் 60 முடிகள் இருக்கும். இவை ஆடை செய்வதற்காக வேட்டையாடப்படும் இனங்களில் ஒன்று. சிலி, பெரு, அர்ஜென்டினா ஆகிய நாடுகளில் அதிகம் காணப்பட்ட சின்சில்லா அரிதான உயிரினங்களின் பட்டியலில் உள்ளது.

## அனஸ்தீஸியா என்றால் என்ன?



அறுவை சிகிச்சையின் போது கொடுக்கப்படும் மருந்தை அனஸ்தீஸியா (Anesthesia) என்கின்றனர். அனஸ்தீஸியா என்பது மயக்க நிலை. கிரேக்கத்தில் இதற்கு உணர்ச்சியற்ற நிலை என்று பொருள். இந்த நிலைக்கு ஒருவரைக் கொண்டுசெல்ல மயக்க மருந்து பயன்படுத்துகின்றனர். காலப்போக்கில் இதையே நாம் மயக்க மருந்து எனச் சொல்லத் தொடங்கிவிட்டோம். நம்மால் வலியைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிகிச்சைகளுக்கு மட்டுமே மருத்துவர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். இதற்கெனத் தனியாகப் படித்த மயக்க மருந்து நிபுணர்கள் (Anesthesiologist) இருக்கின்றனர். மயக்க மருந்துகளில் பல வகைகள் உள்ளன. சிகிச்சை பெறுவோரின் உடல்நிலையை ஆய்வு செய்த பின்பே அதற்கேற்ற மருந்தினை வழங்குகின்றனர்.

## கேளுங்கள்!

உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.



முகவரி :
'அறிவோம் ஆயிரம்',
'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

www.Padasalai.Net

# காற்றடிக்கும் பம்ப்





**தேவையான பொருட்கள்:**


- காலியான தண்ணீர் பாட்டில்
- கத்தரிக்கோல்
- ஒட்டும் டேப்
- சிறிய பலூன்
- பெரிய பலூன்

**செய்முறை:**


- படம் 1இல் உள்ளவாறு தண்ணீர் பாட்டிலின் மூடியில் கத்தரிக்கோலைக் கொண்டு சிறியதாகத் துளையிட்டுக் கொள்ளவும்.
- படம் 2இல் காட்டியுள்ளவாறு அந்தத் துளையினைச் சிறிய பலூன் கொண்டு அடைத்து டேப்பின் உதவி கொண்டு ஒட்டிக் கொள்ளவும்.
- படம் 3இல் காட்டியுள்ளவாறு மூடியின் ஒரு பகுதியில் இருந்து ஊதிப் பார்க்கவும்.
- படம் 4இல் உள்ளபடி பாட்டிலின் இரு பக்கங்களிலும் சிறிய துளைகள் போடவும்.
- படம் 5இல் காட்டியுள்ளவாறு தயார் செய்துள்ள மூடியால் பாட்டிலை மூடி, அதன் வாய்ப்பகுதியில் பலூனை மாட்டவும்.
- படம் 6இல் உள்ளபடி பாட்டிலில் உள்ள இரண்டு துளைகளை, இரு கைகளால் மூடிக்கொண்டு பாட்டிலை அழுத்தவும்.
- படம் 7இல் உள்ளவாறு பாட்டில் மூடியின் துளை வாயிலாகக் காற்று பலூனிற்குச் செலுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து செய்து பலூனிற்குள் காற்றை நிரப்பலாம்.



1



2


3


4


5


6


7

நன்றி: www.aravindguptatoys.com

- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்




சைல்டு லைன் 1098

(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)


# இருவர் யார்? 1

இதில் விளையாட்டு வீரர்கள் இருவரின் முகங்கள் உள்ளன. அவர்கள் யார் யார் எனக் கண்டுபிடியுங்கள்.



# கண்டுபிடி 2


கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் கிரிக்கெட் விளையாட்டுக்கு பொருத்தமில்லாத பொருள் இடம்பெற்றுள்ளது. அந்தப் பொருள் எது என்று கண்டுபிடி.



www.Padasalai.Net


# Riddle 3

1. Where are the lakes always empty, the mountains always flat and the rivers always still?
2. What has legs but cannot walk?
3. What goes up but never comes down?
4. What has to be broken before you can use it?
5. What has a face and two hands but no arms or legs?




விடைகள் 20ஆம் பக்கம்

# மாணவ
# கலை



பா. மானிஷா,
8ஆம் வகுப்பு, அரசு நடுநிலைப் பள்ளி, பொட்டல்குளம், கன்னியாகுமரி.





ஜி. அருள்குமார்,
9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, புதுக்காடு, ஈரோடு.



ரா. ஸ்ரீராம்,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பனப்பாக்கம், கடலூர்.




சி. ரவீனாஸ்ரீ,
7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, லிங்காபுரம், கோயம்புத்தூர்.



பி. ஹரிணி,
6ஆம் வகுப்பு, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, போரூர், சென்னை.



கே. அனுஷ்கா,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கருங்குழி கிழக்கு, செங்கல்பட்டு.



எம். புவன்,
7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஜீபி, கிருஷ்ணகிரி.



ச. ஷஜிகா,
6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, லாலாபேட்டை மேற்கு, கரூர்.




பா. காவ்யா,
7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, காரப்பிடாகை, நாகப்பட்டினம்.




கே. ப்ரீத்தி,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பரலி, நாமக்கல்.

# வர் வண்ணம்




வி. ஈஸ்வர்,

8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, காத்தாடிமட்டம், நீலகிரி.



ம. ரித்தீஸ்,

8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தென் பழஞ்சி, மதுரை.



பா. சுகந்த்,

7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, காட்டுப்பாக்கம், ராணிப்பேட்டை.




இரா. பிரித்திவ்லிங்,

7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, புல்லுக்காட்டு வலசை, தென்காசி.




டி. கலையரசன்,

9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வடஇலுப்பை, திருவண்ணாமலை.



ப. ஸ்சாதானா,

7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, செல்லிப்பாளையம், திருச்சி.



ந. வருண்பிரசாத்,

7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, திருவாஞ்சியம், திருவாரூர்.

ந. ஆகாஷ்,

7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கோவில்பாறை, தேனி.



ஐ. ஜரீன் ஏஞ்சல்,

7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, மவுண்ட் சீயோன், விருதுநகர்.




படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் புகைப்படம், பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',

**'தேன்சிட்டு' சிறார் இதழ்**

8வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

# முன்னோடி எழுத்தாளர்



ந. பிச்சமூர்த்தி

தமிழ் நவீன இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர் எனக் கொண்டாடப்படுபவர் ந. பிச்சமூர்த்தி. வேங்கட மகாலிங்கம் எனும் இயற்பெயர் கொண்ட இவர், 1900ஆம் ஆண்டு கும்பகோணத்தில் பிறந்தார். தொடக்கத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். அந்த வேலையில் நாட்டமில்லாததால் பத்திரிகையாளராக ஆனார். பிறகு அதிலிருந்தும் விலகி அறநிலையத் துறையில் பணியாற்றினார். இப்படி மனம் விரும்பும் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

எந்தப் பணியில் இருந்தாலும் நூல்கள் வாசிப்பதையும் எழுதுவதையும் அவர் விடவில்லை. பாரதியாரின் பாடல்களை விரும்பி வாசித்தார். அதுவே அவரை இலக்கியத்தின் பக்கம் இழுத்து வந்தது. மணிக்கொடி, கலைமகள், சுதந்திரச் சங்கு உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கவிதை, கட்டுரை, கதைகளை எழுதியுள்ளார்.

பெரியவர்களுக்கு மட்டுமன்றி பல்வேறு இதழ்களில் சிறுவர்களுக்கான கதைகளையும் எழுதினார். பின்னாளில் எழுத்தாளர் சி.சு. செல்லப்பா அக்கதைகளைத் தொகுத்து 'காக்கைகளும் கிளிகளும்' எனும் நூலாகத் தந்துள்ளார்.

ஒப்பற்ற படைப்புகளைத் தந்த ந. பிச்சமூர்த்தி 1976 ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவரின் படைப்புகள் 2004ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

# புதிய தடம் பதித்தவர்

இத்தாலியில் 1982ஆம் ஆண்டு பிறந்தவர் எலெனா ஃபாவில்லி (Elena Favilli). இவரின் தாய் மருத்துவர். எலெனா படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டினார். கல்லூரிப் படிப்புக்குப் பிறகு பத்திரிகையாளராகப் பணியாற்றினார். துணிச்சலான ஆய்வுகள் செய்து நிறைய கட்டுரைகள் எழுதினார். தான் தைரியமான பெண்ணாக வளர்ந்ததற்குத் தன் தாய்தான் காரணம் என்று பெருமிதம் கொண்டார். அவரின் தாயைப் போலவே சாதனைகள் செய்த பெண்களைப் பற்றிய நூல் எழுத நினைத்தார்.

அவரின் தோழி பிரான்சஸ்கா கவேலாவுடன் இணைந்து அந்நூலை உருவாக்கத் திட்டமிட்டார். நூலைப் பார்த்ததுமே படிக்கும் ஆவல் குழந்தைகளுக்கு வர வேண்டும் என்பதே முதன்மையானது. அதனால் ஒரு பக்கம் கட்டுரை, ஒரு பக்கம் ஓவியம் எனத் திட்டமிட்டனர். ஆனால், ஓவியம் வரைய நிறைய பணம் தேவைப்படுமே?

தாங்கள் உருவாக்கப் போகும் நூலைப் பற்றி இணையத்தில் எழுதி, விருப்பம் உள்ளவர்கள் உதவலாம் என்று அழைத்தார்கள். நிறைய பேர் முன்வந்தனர். கோடிக்கணக்கில் பணம் வந்தது. அழகான ஓவியங்களோடு 'Good Night Stories for Rebel Girls' எனும் நூலை வெளியிட்டனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் அது பிடித்தது. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் இரண்டாம் பாகம் நூலும் இன்னும் சில நூல்களும் வெளியாகின. அவையும் இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையானது.



எலெனா ஃபாவில்லி

குழந்தைகள், சாதனைப் பெண்களின் கதைகளைக் கேட்டவாறே தூங்கும் பழக்கத்தை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர் எலெனா ஃபாவில்லி.

- சிந்தன்

www.Padasalai.Net

# எங்க ஊரு திருப்புறம்பியம்

**எங்கள் கிராமத்தின் பெயர் திருப்புறம்பியம். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. எங்கள் ஊரைப் பற்றி ஆசிரியர்களிடமும் ஊர்ப் பெரியவர்களிடமும் சேகரித்த செய்திகளைத் தொகுத்துத் தருகிறோம்.**

எங்கள் ஊரின் பெயருக்கு வரலாற்றுக் காரணம் உள்ளது. முதலாம் ஆதித்த சோழ சாம்ராஜ்யத்தின் வெற்றிக்கு அடித்தளமாகவும், சோழ வரலாற்றில் திருப்புமுனையாகவும் அமைந்த வீரத்தின் விளைநிலம் திருப்புறம்பியம்.


நடுகல்


திருப்புறம்பியம் என்றால் பக்கத்தே தண்ணீரையுடையது என்று பொருள். இதற்கு ஏற்ப இங்குள்ள திருக்கோயிலின் மேல்புறத்தில் மதிலை ஒட்டி நீர்நிலை இன்றும் இருக்கின்றது.

## கல்வெட்டுகள்

முதலாம் பராந்தகன், இரண்டாம் ஆதித்தன், முதலாம் இராஜராஜ சோழன், முதற் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், மூன்றாம் இராஜராஜ சோழன், மூன்றாம் இராஜேந்திர சோழன் என்னும் பிற்காலச் சோழ மன்னர்களின் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகள் 62, விஜயநகர வேந்தனாகிய விரூபாட்சிராயன் காலத்தது ஒன்றுமாக 63 கல்வெட்டுகள் இருக்கின்றன.

## உலக வரலாற்றின் மிக முக்கிய போர்

பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நடைபெற்ற இந்தப் போர்தான் உலக வரலாற்றுப் போர்களில் முக்கியமான ஒன்றாக வரலாற்று ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் இப்படி ஒரு பிரமாண்ட போர் நடைபெற்றதே இல்லையாம்.




## பலப்பரீட்சை

இந்த இடத்தில்தான் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் மிகப்பெரிய பலப்பரீட்சையே நடந்தது. பல்லவர்களுடன் ஆதித்த சோழனும் போரில் இணைந்தான். இராஜராஜ சோழனின் பாட்டனார் விஜயாலய சோழன் இப்போரில்தான் மரணம் அடைந்தார். அவருக்கு இங்கே நடுகல் வைக்கப்பட்டுள்ளது. பாண்டியர்களே வெற்றிவாகை சூடினர்.


அம்பாசமுத்திரம் வரகுணா கல்வெட்டு


சதாசிவ பண்டாரத்தார்

## திருப்புறம்பியம் தந்த மேதை

சோழர் வரலாற்றை உலகுக்கு அறிவித்த சதாசிவ பண்டாரத்தார் பிறந்த ஊர் திருப்புறம்பியமாகும். இவர் ஒரு மிகச் சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ஆவார். சோழர் வரலாறு குறித்து எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க எங்கள் ஊரை நீங்களும் வந்து பாருங்களேன்.


பழங்கால ஓவியம்


பள்ளிப்படைக் கோவில்



**எஸ். பூங்கனி,**
9ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருப்புறம்பியம்,
தஞ்சாவூர்.


www.Padasalai.Net

# நீலகிரி வரையாடு



தமிழ்நாட்டின் மாநில விலங்கு வரையாடு. இது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழ்கின்றது. நமது பழந்தமிழ் இலக்கியங்களில்கூட வரையாடு பற்றிய குறிப்புகள் உள்ளன. சிறப்பு மிக்க வரையாடு குறித்த சுவையான தகவல்களைப் பார்ப்போம்.

- முன்பு மேற்குத் தொடர்ச்சி மலை முழுவதும் காணப்படும் வரையாடுகள், தற்போது கேரளம், தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஏறத்தாழ 3 ஆயிரத்து 122 வரையாடுகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.
- ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியில் இந்த வரையாடு குறித்த வரிகள் இடம் பெற்றுள்ளன.
- இயல்பாகவே வரையாடுகள் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1200 முதல் 26 ஆயிரம் மீட்டர் உயரம் உடைய குளிர்ந்த புல்வெளிகளில் வாழ்கின்றன. மலைகளில் மட்டுமே வாழும் தன்மை உடையதாக உள்ளன.
- கேரளாவின் ஆனைமலை மலையில் உள்ள இரவிகுளம் தேசியப் பூங்காவில் சுமார் 700 நீலகிரி வரையாடுகள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் வடக்கே நீலகிரி மற்றும் தெற்கே கன்னியாகுமரி மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் சுமார் 400 கி.மீ. பரப்பளவில் இவை வாழ்கின்றன.
- பழனி மலைகள், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் மேகமலை மற்றும் அகஸ்தியர் மலைத்தொடரில் குறைந்தபட்ச எண்ணிக்கையில் மட்டுமே வரையாடுகள் காணப்படுகின்றன.
- இந்தியாவில் கணிசமாகக் குறைந்து வரும் உயிரினப் பட்டியலில் வரையாடுகள் உள்ளன. இவற்றைப் பாதுகாப்பதற்காக இந்திய வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் (1972) வாயிலாக உத்தரவுகள் இடப்பட்டுள்ளன.
- வேட்டையாடுதல், வனப் பகுதிகளில் நடக்கும் ஆக்கிரமிப்புகள் ஆகிய காரணிகளால் வரையாடுகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள புல்வெளிகள் அழிக்கப்படுவதே வரையாடுகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.
- இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பகுதிகளில் நீலகிரி வரையாடுகளைப் பாதுகாக்க ரூ.25 கோடியில் நீலகிரி வரையாடுகள் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு அரசால் 2022ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.



www.Padasalai.Net

# நூல் அறிமுகம்






## கல்பனா சாவ்லா சொன்னது கதையா?

9ஆம் வகுப்புப் படிக்கும் பள்ளி மாணவி இளம்பிறை வழியாக, மனித உருவ ரோபோ நிலவை நம் கண் முன்னே காட்டுகிறது. 'அழகே உருவான நிலா' என எத்தனையோ பாடல்களை நாம் கேட்டிருப்போம். நிலவு எப்படி இருக்கும் எனத் தெரியாமலேயே நிலவு குறித்து நிறையவே கேட்டிருக்கிறோம். ஆனால், விண்வெளியில் பயணம் செய்த கல்பனா சாவ்லாவின் உருவில் இருக்கும் ரோபோ, நிலவு குறித்த உண்மைக் கதைகளை நமக்குச் சொல்கிறது. நிலவைப் பற்றி நீங்களும் தெரிந்து கொள்ள வாங்கிப் படியுங்கள்.


ஆசிரியர் : தேன்மொழி
ஓவியங்கள் : ஆகாஷ்

## 1098

பள்ளியில் வகுப்பு ஆசிரியர், "எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக ஆசைப்படுகிறீர்கள்" எனக் கேட்டால், டாக்டர் ஆவேன், கலெக்டர் ஆவேன், இராணுவத்தில் சேர்வேன், டீச்சர் ஆவேன் எனச் சொல்வோம். பள்ளிப் படிப்பைக் கூடத் தாண்ட முடியாமல், ஆண் பிள்ளைகள் என்றால் வேலைக்குச் செல்வதும் பெண் பிள்ளைகள் என்றால் திருமணம் செய்து வைப்பதுமான நிலையும் இங்கு இருக்கத்தான் செய்கிறது. அவர்களின் கல்விக் கனவு கனவாகவே போய்விடுகிறது. அப்படியான நெருக்கடிகளில் இருந்து மீளவும், மாணவர்களுக்கு ஏற்படும் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கும் தீர்வைத் தருகிற ஒரு எண் உள்ளது. அது என்ன எண்? அதற்கு அழைத்தால், மாணவர்களின் பிரச்சினைகள் தீருமா? என இந்தக் கதை வழியாக நளினியும் திருமலையும் நமக்கு எடுத்துச் சொல்கிறார்கள். நீங்களும் வாங்கித் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர் : இனியன்
ஓவியங்கள் : கார்த்திகா




## சைன்ஸ் படிச்சவன்

பெண்கள் செய்யும் வேலை, ஆண்கள் செய்யும் வேலை என்று தனித்தனியாக எதுவும் இல்லை. இயற்கையின் நியதிப்படி பெண்களால் மட்டுமே செய்ய முடிந்தது ஒன்றே ஒன்றுதான், பிள்ளைப்பேறு. மற்ற எல்லா வேலைகளிலும் ஆண்களுக்கும் பங்கு உண்டு என்பதை அறிவியலின் துணைக் கொண்டு விளக்குகிறார் நூலாசிரியர். முகமது பாட்சா, நாராயணசாமி என்கிற இரண்டு மாணவர்களின் வழியாக, அறிவியல், பெண் விடுதலை, சமத்துவம் என எல்லாவற்றையும் இந்தச் சிறிய கதையில் சொல்லி விடுகிறார் ஆசிரியர். ஆண்கள் சமைத்தால்தான் என்ன? பாத்திரங்கள் கழுவினால்தான் என்ன? என்பதைத் தெளிவாகச் சொல்லும் இந்த நூலை நீங்களும் வாங்கிப் படியுங்கள்.

ஆசிரியர் : ச. தமிழ்ச்செல்வன்
ஓவியங்கள் : மகேஸ்

மேற்கண்ட மூன்று நூல்களையும் வெளியிட்டோர்,

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,**

எண். 68, ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

www.Padasalai.Net

# புதிய ஊரை நோக்கி...



கதை : ரோஹிணி கெஜ்ரிவால்
ஓவியங்கள் : சாஹியா ராணி
தமிழில் : அனிதா ராம்குமார்




"என் செருப்பா... மலைகளா... பெட்டியா?" எனக் கேட்டார் அம்மா. மீனா கண்டுகொள்ளவில்லை.
"பெட்டிதான் சரியான பதில்" எனக் கைத்தட்டினார் அப்பா. மீனா புத்தகத்தைக் கீழே வைத்தாள்.
"அதோ மஞ்சள் நிறத்தில் ஏதோ தெரியுதே" என்றார் அம்மா.
"வயலா?" என அப்பா கேட்க, "என் ஹேர்பேண்ட்" என மீனா பதில் சொன்னாள்.
"மீனா சொன்னதே சரி" என அம்மா பாராட்டினார்.
மீனாவும் விளையாட்டில் கலந்துகொண்டாள்.
"அங்கே நீல நிறத்தில் ஏதோ தெரியுதே?" என்றாள்.
"ஆகாயம்" என்றார் அம்மா.
"அங்கே பச்சை நிறத்தில் ஏதோ தெரியுதே?" என மீனா கேட்க, "புல்" என்று அம்மா சொன்னார்.
பார்ப்பவற்றின் நிறத்தை வைத்து ஆடிய விளையாட்டால் நேரம் போனதே தெரியவில்லை.
கம்பளி விரித்து மீனாவைப் படுக்க வைத்தனர் பெற்றோர். "புதிய ஊரிலும் இந்த விளையாட்டை ஆடலாமா?" எனக் கேட்டாள் மீனா.
"நிச்சயமாக.. புது இடத்தில் இந்த விளையாட்டு இன்னும் ஜாலியாக இருக்கும்" என்று அப்பா சொன்னதும் மகிழ்ச்சியானாள் மீனா.
நன்றி : www.storyweaver.org.in




# வெள்ளி 10



எப்போதுமே நம்மை வியக்க வைத்துக்கொண்டே இருப்பது விண்வெளி. நாம் தேடத் தேடப் புதிய புதிய தகவல்கள் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

சூரியனிடம் இருந்து மூன்றாம் இடத்தில் இருக்கும் கோள் நமது பூமி. நமக்கு மிக அருகில், அதாவது சூரியனிடம் இருந்து இரண்டாம் இடத்தில் இருப்பது வெள்ளி. இந்தக் கோள் குறித்து அறிந்து கொள்வோம்.

1. சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் புதன்தான் வெப்பமான கோள் என்று பலரும் கருதுவர். ஆனால், வெள்ளிதான் சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள். புதனைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு வெப்பம் கொண்டது வெள்ளி.
2. வெள்ளியின் உச்சக்கட்ட வெப்பம் சுமார் 470 டிகிரி செல்சியஸுக்கு மேல் இருக்கும். இதன் மேற்பரப்பு வெப்பமே ஈயத்தை உருகச் செய்வதற்குப் போதுமானது.
3. பூமியைப் போலவே வெள்ளியின் அமைப்பும் வடிவமும் இருப்பதால் இதை பூமியின் இரட்டை (Earth's twin) என்றும் அழைக்கின்றனர். சூரியன், நிலவுக்கு அடுத்தபடியாக வானத்தில் தெரியும் பிரகாசமான கோள் வெள்ளி.
4. எரிமலைகள் அதிகமுள்ள கோள்களில் வெள்ளி முதலிடம் வகிக்கிறது. இதில் ஆயிரத்துக்கும் அதிகமான எரிமலைகள் உள்ளன.
5. பழங்கால ரோமானியர்கள் சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களுக்குத் தங்கள் கடவுள்களின் பெயரைச் சூட்டுவது வழக்கம். வெள்ளிக்குத் தங்களின் கடவுளான அஃப்ரோடைட் பெயரைச் சூட்டியிருந்தனர்.
6. வெள்ளியின் சுற்றுப்பாதை 11 கோடி கிலோமீட்டர் ஆகும். சூரிய வெளிச்சம் வெறும் 6 நிமிடத்திலேயே வெள்ளியை வந்தடைந்து விடும். அதிகமான வெளிச்சத்தின் காரணமாக நாம் வெள்ளியைப் பகலிலும் கூடப் பார்க்க முடியும்.
7. வெள்ளி மிகவும் மெதுவாகச் சுழலக் கூடியது. இங்கு சூரியன் தோன்றி மறைய பூமியின் கணக்குப்படி 117 நாட்கள் ஆகும்.
8. புதன் போலவே வெள்ளிக்கும் துணைக்கோள் கிடையாது. சூரியக் குடும்பத்தில் இந்த இரண்டு கோள்களுக்கு மட்டுமே துணைக்கோள் இல்லை.
9. வெள்ளிக்கு வளைய அமைப்பு (Ring System) கிடையாது.
10. வெள்ளியின் மேற்பரப்பு அமைப்பு முழுவதை அறிய நாசாவால் அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர் மெகல்லன் (Magellan). இது வெள்ளியின் மேற்பரப்பு கொதிக்கொதி இருப்பதைக் கண்டறிந்தது.



## பக்க விடைகள்

கண்டுபிடி



## பக்க விடைகள்

### இணையைப் பெயர் என்ன?

புலி - பறழ்
சிங்கம் - குருளை
பாம்பு - குட்டி
அணில் - பிள்ளை

### சொல் கண்டுபிடி

புத்தகம் - பனுவல், மனம் - சிந்தை,
குளம் - வாவி, தலை - சிரசு,
வீடு - உறையுள், கண் - நயனம்.

## 11ஆம் பக்க விடைகள்

### 1. இருவர் யார்?


1. மிதாலி ராஜ்


2. பி.வி. சிந்து

### 2. கண்டுபிடி

கூடைப்பந்து

### 3. Riddle


1. A map
2. A chair
3. Your age
4. An egg!
5. A clock!


# துணிச்சலான பெண்மணி



இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவரின் வீட்டில் பிறந்தவள் அந்தச் சிறுமி. ஏராளமான வேலையாட்கள், விளையாட டென்னிஸ் மைதானம் எனச் செல்வத்தில் செழித்த குடும்பம் அது. அந்தச் சிறுமிக்குக் கல்வி அளிக்க பிரிட்டிஷ் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். சிறுமியின் அண்ணன் குதிரையேற்றம் செய்ய விரும்பியதால் அவருக்குத் தனிக் குதிரையே வாங்கித் தந்தனர். அண்ணனைப் போலவே தங்கைக்கும் சின்னக் குதிரையை வாங்கித் தந்தனர்.

அரசியலிலும் புகழ்பெற்றது அவரது குடும்பம். அதனால் அவரின் வீட்டுக்கு ஒருமுறை காந்தியடிகள் வந்தார். அப்போது ஒரு பத்திரிகையை இந்தப் பெண்ணிடம் தந்து ஒரு கட்டுரையைப் படிக்கச் சொன்னார். அதை எழுதியவர் ரஞ்சித் பண்டிட் என்றும் அறிமுகப்படுத்தினார். பின்னாளில் அந்த ரஞ்சித் என்பவரையே அந்தப் பெண் திருமணம் செய்துகொண்டார். அவர் சொந்தத் தொழிலை விட்டு நாட்டின் விடுதலைக்காகக் களத்தில் நின்றார். இந்தப் பெண்ணின் அண்ணனும் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று பணியாற்றினார். பட்டு ஆடைகளை உடுத்திப் பழகிய அந்தப் பெண் காந்தியின் உரையைக் கேட்டு, கதர் ஆடைக்கு மாறினார்.





விஜயலட்சுமி பண்டிட்

அந்தப் பெண் வேறு யாருமல்ல, விஜயலட்சுமி பண்டிட் தான். இவரின் அண்ணன் ஜவஹர்லால் நேரு. பிரிட்டிஷாரை எதிர்த்து ஊர் ஊராகச் சென்று பரப்புரை செய்தார். அலகாபாத்தில் விதிக்கப்பட்ட தடையை மீறி கூட்டம் நடத்தியதால் பலரையும் சிறைக்கு அனுப்பியது அரசு. அவர்களில் முதன்மையான நபர் விஜயலட்சுமி. ஓராண்டு காலம் கொடுமையான சிறை வாழ்க்கையை எதிர்கொண்டார். இப்படிப் பல நிகழ்வுகள். பின்னாளில் உத்தரப்பிரதேசத்தில் அமைச்சராகப் பதவியேற்றார். அவரே நாட்டின் முதல் பெண் அமைச்சர் எனும் பெருமைக்கு உரியவர். ஐ.நா. சபையின் முதல் பெண் தலைவராகப் பணியாற்றினார். மஹாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராகவும் பொறுப்பு வகித்தார். 1990ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

# கீழாநெல்லி



நெல்லிக்காய் நம் எல்லோருக்கும் தெரியும். கீழாநெல்லியைக் கேள்விப்பட்டுள்ளீர்களா? நம் வீட்டைச் சுற்றி வளரும் பல்வேறு செடிகளில் ஒன்றுதான் கீழாநெல்லி. ஏராளமான மருத்துவப் பயன்களை அள்ளித் தரும் தாவரங்களில் ஒன்று.

- கடலோர வெப்ப மண்டலப் பகுதிகள்தான் கீழாநெல்லியின் பிறப்பிடம். நம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இதைக் காணமுடியும்.
- கீழாநெல்லி என்பது பரவலாகக் குறிப்பிடும் பெயர். கீழ்வாய் நெல்லி, கீட்காநெல்லி என்றும் இது குறிப்பிடப்படுகிறது.
- கீழாநெல்லியின் அறிவியல் பெயர் - பைலந்தஸ் நிருரி *[Phyllanthus niruri]*.



- பூக்கும் தாவர வகையைச் சேர்ந்த கீழாநெல்லிச் செடி 70 சென்டி மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. செங்குத்தாகவோ அல்லது தரை மீது படர்ந்தோ வளரும்.
- சித்தா, யுனானி, ஆயுர்வேதம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ முறைகளில் கீழாநெல்லி மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.
- கீழாநெல்லி சாற்றை மோர் அல்லது தயிருடன் கலந்து சிலர் பருகுவார்கள்.
- மஞ்சள் காமாலை தொடங்கி, சொறி, சிரங்கு போன்ற சருமப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இது பயன்படுவதாகக் கூறப்படுகிறது.
- உணவே மருந்து என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அகத்தியரின் 'குணபாடம்' நூலில், கீழாநெல்லி குறித்துப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கீழாநெல்லிக்குப் பல்வேறு மருத்துவ குணங்கள் இருந்தாலும், அதை உட்கொள்வதற்குச் சில வழிமுறைகள் இருக்கின்றன. எனவே மருத்துவர் கூறும் ஆலோசனையின்படி உட்கொள்ள வேண்டும்.
- இதன் இலை கசப்பு மிக்கதாக இருக்கும்.
- இத்தாவரத்தில் பொட்டாசியம் சத்து அதிகம் காணப்படும்.



www.Padasalai.Net

# இந்த இதழ்கள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமா?









## உங்களுக்குப் பிடித்த ஊஞ்சல், தேன்சிட்டு

**இதழ்கள் உங்கள் வீடுகளுக்கு நேரடியாக வர வேண்டுமா?**

இந்த QR- Code ஐ ஸ்கேன் செய்து உடனே சந்தாதாரர் ஆகுங்கள்





www.Padasalai.Net

Then Chittu Fortnightly Registered with RNI No. TNTAM/2022/82345
Postal Registration No. TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No. TN/PMG(CCR)/WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 16-20 September 2024 Posted at Egmore RMS/ Patrika Channel
இதழ் 44

# செப்டம்பர் 16–30


## பிறந்தவர்கள் / சிறப்பு தினங்கள்



## தந்தை பெரியார் — 17

'தந்தை பெரியார்' எனப் போற்றப்படும் ஈ.வெ. ராமசாமி, 1879ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் பிறந்தார். மூடநம்பிக்கைகளைத் தனது சிறு வயது முதலே ஏற்க மறுத்தார். பின்னாளில் அதையே தனது வாழ்நாள் பரப்புரையாக அமைத்துக் கொண்டார். சமூக சீர்திருத்தம், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை உள்ளிட்ட பல்வேறு கொள்கைகளுக்காகத் தொடர்ந்து களத்தில் நின்றார். 'குடியரசு' எனும் நாளிதழைத் தொடங்கி அதன் வாயிலாகச் சமத்துவக் கருத்துகளை மக்களிடையே விதைத்தார். சமூகத்தில் ஏற்றத்தாழ்வு நீங்க வேண்டும் எனத் தன் 94ஆவது வயது வரை குரல் கொடுத்தார்.

## ரவிச்சந்திரன் அஸ்வின் — 17



இந்தியக் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்பவர் ரவிச்சந்திரன் அஸ்வின். [illegible]ஆம் ஆண்டு சென்னையில் பிறந்த இவர், சுழற்பந்து வீசுவதில் உலகின் தலைசிறந்தவர்களில் ஒருவராக விளங்குகிறார். டெஸ்ட் போட்டிகளில் முத்திரை பதிக்கும் அஸ்வின் 500க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தி சாதித்துள்ளார். பலருக்கும் நம்பிக்கை அளிக்கும் வீரராகக் களத்தில் ஆடி வருகிறார்.

## சுனிதா வில்லியம்ஸ் — 19



அமெரிக்க விண்வெளி மையமான நாசாவின் விண்வெளி வீரர் சுனிதா வில்லியம்ஸ். இந்திய வம்சாவழியைச் சேர்ந்த இவர் 1965ஆம் ஆண்டு பிறந்தார். சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மூன்று முறை பயணம் செய்துள்ளார். தற்போது சுனிதா போயிங் நிறுவனத்தின் புதிய விண்கலமான ஸ்டார்லைனரைச் சோதிக்க விண்வெளிக்குச் சென்றுள்ளார்.

## நாகேஷ் — 27



தமிழ் சினிமாவின் பழம்பெரும் நகைச்சுவை நடிகரான நாகேஷ் 1933ஆம் ஆண்டு பிறந்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்களில் நடித்த பெருமைக்கு உரியவர். சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றுள்ள நாகேஷிற்குத் தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

## லதா மங்கேஷ்கர் — 28



இந்தியாவின் புகழ்பெற்ற பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் 1929ஆம் ஆண்டு மத்தியப்பிரதேசம் இந்தூரில் பிறந்தார். வங்காளம், மராத்தி, தமிழ் உள்ளிட்ட 14 மொழிகளில் 50,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். உலகிலேயே அதிகப் பின்னணிப் பாடல்களைப் பாடி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். இவருக்கு தாதா சாகேப் பால்கே விருது, பத்மவிபூஷண், பாரத ரத்னா ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## உலக ஓசோன் பாதுகாப்பு தினம் — 16



உலக ஓசோன் தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 16 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. ஓசோன் அடுக்குச் சிதைவு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரப்புவதும், அதைப் பாதுகாப்பதற்கான சாத்தியமான தீர்வுகளைக் காண்பதும் இந்தத் தினத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

## உலக காண்டாமிருக தினம் — 22




உலக வனவிலங்கு நிதியம் (World Wide Fund for Nature) அமைப்பால் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 22 அன்று உலக காண்டாமிருக தினம் கொண்டாடப்படுகிறது. ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் வாழும் காண்டாமிருக இனங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த நாளின் நோக்கமாகும்.

## சர்வதேச சைகை மொழி தினம் — 23



உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் சார்பில் (World Federation of the Deaf) 2018ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 23 அன்று சர்வதேச சைகை மொழி தினம் கொண்டாடப்படுகிறது. சைகை மொழியின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் முதன்மையான நோக்கமாகும்.

## உலகச் சுற்றுச்சூழல் சுகாதார தினம் — 26



2011ஆம் ஆண்டு முதல் உலகச் சுற்றுச்சூழல் சுகாதாரக் கூட்டமைப்பால் (International Federation for Environmental Health) சுகாதார தினம் செப்டம்பர் 26 அன்று கொண்டாடப்படுகிறது. சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் பேணுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

உங்களுக்கு தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா?
நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.